**17.02.2026**

**O.S.No.55/2003 மற்றும் 99/2016**

**வா.சா.4 : தனசேகரன்**

**<u>1,3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் சேலத்தில் குடியிருக்கிறேன். நான் எவ்வளவு காலமாக குடியிருக்கிறேன் என்றால் சுமார் 20 வருடம் குடியிருக்கிறேன். எங்கள் குடும்பத்தில் வழக்கு நடப்பதாக சொல்லியுள்ளதில் அந்த வழக்கு சொத்து எவ்வாறு எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பா வெங்கட பெருமாளுக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் அவர் கிரயம் வாங்கினார். யாரிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் ஏத்தாப்பூர் தண்டபாணி ஐயரிடம் இருந்து கிரயம் வாங்கினார். அந்த தண்டபாணி ஐயருக்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. அப்போது எனக்கு சிறிய வயது. தண்டபாணி ஐயர் குடும்பத்தில் உள்ள நபர்கள் எனக்கு தெரியாது.

2) தண்டபாணி ஐயருக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. தண்டபாணி ஐயருக்கு உண்டான மூலபப்பத்திரம் எதுவும் இதுவரை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. தண்டபாணி ஐயர் விற்ற சொத்தின் சர்வே எண் எனக்கு ஞபாகம் இல்லை. பார்த்தால் சொல்வேன். அதில் எவ்வளவு சொத்தை வாங்கினார் என்றால் 90 செண்ட் வாங்கினார். அதில் 75 செண்டை எனது அப்பா விற்றுவிட்டார். அவருடைய மைத்துனர் வெங்கடாசலம் என்பவருக்கு விற்றுவிட்டார். எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. தற்போது 2700 ச.அடி தான் உள்ளது. 2700 ச.அடிக்கு எனது அம்மா என் பெயரில் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான்.

3) 1 செண்ட் 436 ச.அடி. நான் வங்கி ஊழியர். நான் ரியல் எஸ்டேட் எதுவும் செய்யவில்லை. 15 செண்ட்டிற்கு எவ்வளவு ச.அடி என்றால் கணக்கு போட்டு தான் சொல்ல முடியும். 2700 ச.அடி மீத சொத்தை நானும் எனது தம்பியும் விற்றுவிட்டோம். நானும் எனது தம்பியும் பாகம் பிரித்து கொண்டோம். என் தம்பி பெயர் சக்தி. அவர் இறந்துவிட்டார். 3-1/2 வருடம் ஆகிறது. குணலட்சுமி, சரண்யா, ஜெயக்குமார்

ஆகியோர் எனது தம்பியின் வாரிசுகள். விஜயலட்சுமி எனது மூத்த சகோதரி. நாங்கள் எழுதி கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. 1989 பதிவு செய்யப்பட்டு பாகப்பிரிவினை ஏற்பட்டது. விஜயலட்சுமி தாக்கல் செய்த வழக்கில் பாகப்பிரிவினை பத்திரம் ஒப்படைக்கவில்லைல. விஜயலட்சுமி, எனது தம்பி மனைவி குடும்பத்தாருக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை. 2700 ச.அடி போக மீதி உள்ள சொத்தை எனது அப்பா மற்றும் நானும் விற்றேன் என்பதற்கு நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதை விஜயலட்சுமி வழக்கிலும் தாக்கல் செய்யவில்லை.

4) தண்டபாணி ஐயர் உடன் பிறந்தவர்கள் 4 பேர் என்றால் தெரியாது. அவர் அண்ணன் தம்பி 4 பேர் என்றால் தெரியாது. டாக்டர் விஸ்வநாதன் சொத்து வாங்கியது எனக்கு நேரில் தெரியும் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். மேற்படி பத்திரத்தை நான் பார்த்ததில்லை. அவர் எனது குடும்ப டாக்டர். எனது நிருபண வாக்குமூலத்தல் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உதில் உள்ள சங்கதிகள் அனைத்தும சரிதான். அதில் 2 வது பாராவில் 3 வது வரியில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி உள்ளது தான் என்றால் நேரரிடையாக எனக்கு தெரியாது. சீதாராமன் ஐயரும் தண்டபாணி அய்யரும மற்றும் இரண்டு பேரும் அண்ணன் தம்பி என்றால் தெரியாது.

5) 90 செண்ட் நிலத்தை எனது அப்பா விற்பதற்கு தண்டபாணி ஐயருக்கு உரிமை இல்லை என்றும் அவர் விற்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. விற்பதாக சொல்லி உள்ள பத்திரம் தவறானது என்றால் சரியல்ல. விற்க உரிமை இல்லாத தண்டபாணி 20.11.1959 தேதியிட்ட பத்திரமே சட்டப்படி செல்லாத பத்திரம் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் மேற்படி சொத்தை விற்ற பத்திரங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அவ்வாறு விற்க எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. 90 செண்ட் வெங்கடப்ப பெருமாள் வாங்கிய சொத்தின் 4 எல்லைகள் தெற்கு பக்கம் ரயில் வே லைன், மேற்கு பக்கம் ஆரியபாளையம் ரோடு,

கிழக்கு பக்கம் டாக்டர் விஸ்வநாதன் மற்றம் ஆறுமுகம் நிலம், வடக்கு பக்கம் ஆத்தூர் சேலம் மெயின்ரோடு. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள மல்லியகரை ரோட்டுக்கு கிழக்கு, சேலம் கடலூர் மெயின்ரோட்டுக்கு தெற்கு, அதனுடன் வெங்கடாசல ஆசாரி, ஆரியபாளையம் கர்ணம் ராமராவ், ராமாசாமி முதலியார், சடையப்பிள்ளை, சுப்பு ரெட்டியார், சீனிவாசன், ராசிபுரத்தார் என்கிற கருப்பண்ண படையாச்சி மற்றும் டாக்டர் விஸ்வநாதன் ஆகியோர் பெயரில் செக்குபந்தியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) ரயில்வே லைன் எல்லை வரைக்கும் நான் சொல்லிய 90 செண்ட் சொத்து இல்லை என்று சொன்னால் நடைமுறையில் உள்ளதா என்று தெரியாது. நான் கொடுத்துள்ள 1959 பத்திரத்திலேயே ரயில்வே லைன் என்று சொல்லாமல் ராமர் கவுண்டர் நிலத்திற்கு வடக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிழக்கு புறத்திலும் விஸ்வநாதன் மற்றும் ராமர் கவுண்டர் நிலத்திற்கு மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல செக்குபந்தி உள்ள சொத்து ஸ்தலத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நேஷனல் ஹை வே போடும்போது எங்களுக்கு நிலம் இல்லை. நான் சொல்லும் பிளாட் மேற்கு புறம் பார்த்த பிளாட் தான் என்றால் சரிதான். வெங்கடப்பட்ட பெருமாளுக்கு உரிமை இல்லை என்றும் தண்டபாணி ஐயருக்கும் மேற்படி சொத்து உரிமை இல்லை என்பதால் அதைப்பொறுத்து நான் செய்த பத்திரங்களும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் அதன் படி எவ்வித உரிமையும் இல்லை என்றும் அதன் அடிப்படையில் சாட்சி சொல்ல எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7) வழக்கு போட்டுள்ள எனது சகோதரி முதல் ஐட்ட சொத்து 2700 ச.அடி அல்ல என்றும் 2790 ச.அடி என்றால் தோராயமாக தான் சொல்ல முடியும். நான் ஆத்தூர் நகர கூட்டுறவு வங்கியில் பணியில் இருந்து வருகிறேன். 33 வருடம் சேவை செய்துள்ளேன். கிளை மேலாளராகவும் இருந்துள்ளேன். எனக்கு சொத்தை பற்றி தெரியவே இல்லை என்றால் சரியல்ல. என் குடும்ப சொத்து என்று சொல்லும்

அளவுக்கு எனக்கு சொல்ல தெரிய வில்லை என்றால் சரியல்ல. வாதி எனது அக்கா, நான், சக்தியின் வாரிசுகள் ஆகியோர் வெங்கடாசல ஆசாரி மகன் கண்ணையன் என்பவரை ஏமாற்றி மோசடி செய்யும் பொருட்டு அவரை 5 வது பிரதிவாதியாக அசல்வழக்கு எண். 124/2014 காண்பித்து என் அக்கா விஜயலட்சுமி வைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த வழக்கு எங்களை பொறுத்து பெயரளவில் தாக்கல் செய்துள்ள வழக்கு என்றால் சரியல்ல. என் அக்கா என் மீது பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். கண்ணையா ஆசாரி இந்த வழக்கில் ஒரு தரப்பினரா என்றால் என்னால் படிக்க முடியாது. கண் பார்வை குறைவு எனக்கு உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து சொல்ல இயலாது என்றால் நான் ஆள் வைத்து படித்து தெரிந்து கொண்டேன். எனவே எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனக்கு தெரியவே தெரியாது என்றும் நான் சொல்லி உள்ள இந்த சங்கதிகள் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

8) எனது பெயரிலும், என் தம்பி பெயரிலும், என் சகோதரி பெயரிலும், என் அப்பா பெயரலும் எங்களிடம் விற்ற தண்டபாணி அய்யர் பெயரிலும் மேற்படி சொத்திற்கு ஏதும் வருமான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வீட்டில் குடியிருந்து வந்ததற்காக வீட்டு வரி ரசீது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வீடே இல்லை. வருவாய் துறை ஆவணங்கள் பட்டா, சிட்டா, அடங்கல் முதலியவை எனது பெயரிலும், என் தம்பி பெயரிலும், என் சகோதரி பெயரிலும், என் அப்பா பெயரலும் எங்களிடம் விற்ற தண்டபாணி அய்யர் பெயரிலும் இதுநாள் வரை இல்லை என்பதால் 1959 தேதியிட்ட பத்திரமானது பொய்யான பத்திரம் என்றால் சரியல்ல. அது உண்மையான ஆவணம் என்றால் வருவாய் துறையில் ஆவணங்கள் வாங்கியிருக்கலாம் என்றால் சரியல்ல. விஸ்வநாதனுக்கு திருமணம் ஆகவில்லை. அவரது தம்பிக்கு திருமணம் ஆனது. அவரது மனைவி பெயர் விசாலாட்சி. அவரை நேரடியாக பார்த்து சுமார் 20 வருடம் ஆகிறது. போனில் பேசுவோம்.

9) எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சொத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. பார்த்து தான் சொல்ல முடியும். அவ்வளவும் நினைவில் வைத்து கொள்ள முடியாது. எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாது என்றும் மேற்படி சொத்து பற்றி தெரியாது என்றும் யார் யார் மீது வழக்கு நடக்கிறது என்று தெரியாது என்றும் ஒன்றுமே தெரியாமல் அனைத்தும் தெரிந்த மாதிரி சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து டாக்டர் சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் கல்லேரி ராஜேந்திரனிடம் உள்ளது. யாரிடம் இருந்து வாங்கினார் என்று தெரியாது. கிரய பத்திரம் பார்த்தால் தான் சொல்ல முடியும். யார் அனுபவித்து வருகிறார் என்றால் ராஜேந்திரன். ராஜேந்திரனை தவிர வேறு யார் அனுபவித்து வருகிறார் என்று தெரியாது. எப்போது வாங்கினார் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினார் என்று தெரியுமா என்றால் எனக்கு அவ்வளவாக நினைவில் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் ராஜேந்திரனிடமோ அவரை சார்ந்தவர்களிடமோ வழக்கு சொத்து இல்லை என்றும் இந்த வழக்கின் பிரதிவாதிகள் வசம் தான் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. எனவே இந்த வழக்கு பற்றி தெரியவில்லை என்றும் வழக்கு சொத்தை பற்றியும் தெரியவில்லை என்றும் வழக்கின் மூல ஆவணங்களை பற்றியும் தெரியவில்லை என்றும் வழக்கின் சொத்தை விற்றவர்கள் பற்றியும் தெரியவில்லை என்றும் நான் வழக்கை பொறுத்தவரை உள்நோக்கத்திற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் இந்த வழக்கை பொறுத்து வரை என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2026.02.17 22:52:47 +0530

**Subordinate Judge, Attur.**